# பங்குகள்

**பங்குச்சந்தை**

- வரையறுத்த பொதுக்கம்பனிகள் தமக்கு தேவையான நிதியினை சிறுபங்குகளாக பிரித்து பகிரங்க ஊடக அறிவித்தல் மூலம் பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
- பொதுமக்கள் பங்குகளை கொள்வனவு செய்யவும் விற்பனை செய்வதற்குமான வசதிகளை பங்குச் சந்தை வழங்குகின்றது.
- பங்குகளின் எண்ணிக்கை கணிக்கும் முறை

$$\text{பங்குகளின் எண்ணிக்கை} = \frac{\text{முதலீடு}}{\text{ஒரு பங்கின் விலை}}$$

**உதாரணம்**

**பங்குகளின் எண்ணிக்கை காணல்**

- கண்ணன் ஒரு பங்கின் விலை ரூ. 25 ஆகவுள்ள கம்பனியின் பங்குகளை வாங்குவதற்கு ரூ. 5000 முதலீடு செய்தார். கண்ணன் வாங்கிய பங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.

$$\text{பங்குகளின் எண்ணிக்கை} = \frac{\text{முதலீடு}}{\text{ஒரு பங்கின் விலை}}$$

$$= \frac{5\,000}{25}$$

$$= 200$$

**உங்களின் முயற்சிக்கு…**

1. பங்கொன்றின் விலை ரூ. 30 ஆகும். அப்பங்குகளில் ரூ. 45 000 இனை முதலீடு செய்யும் ஒருவர் கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.

2. செல்வன் என்பவர் ரூ. 20 பெறுமதியான கம்பனியொன்றின் பங்குகளில் ரூ. 15 000 இனை முதலீடு செய்கின்றார். அவர் கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.

3. சுபா கம்பனியொன்றில் ரூ. $60\,000$ இனை முதலீடு செய்து அக்கம்பனியின் ரூ. $20$ பெறுமதியான பங்குகளை கொள்வனவு செய்கின்றார். அவர் கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.

4. குமரன் தன்னிடம் இருந்த ரூ. $40\,000$ இனை கம்பனியொன்றின் பங்குகளில் முதலீடு செய்கின்றார். கம்பனியின் பங்கொன்றின் விலை ரூ. $8$ எனின் அவர் கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.

## முதலீடு செய்த தொகையைக் காணல்

**உதாரணம்**

- கம்பனியொன்யொன்றின் ரூ. $25$ பெறுமதியான பங்குகளில் $1\,200$ வைத்திருக்கும் ஒருவர் அப்பங்குகளைக் கொள்வனவு செய்வதற்காக முதலீடு செய்த தொகையைக் காண்க.

$$\text{பங்குகளின் எண்ணிக்கை} = \frac{\text{முதலீடு}}{\text{ஒரு பங்கின் விலை}}$$

$$1\,200 = \frac{\text{முதலீடு}}{25}$$

$$\text{முதலீடு} = 1\,200 \times 25$$

$$= \text{ரூ. } 30\,000$$

**உங்களின் முயற்சிக்கு…**

1. கம்பனியொன்றின் ரூ. $20$ பெறுமதியான பங்குகளில் $200$ இனை கொள்வனவு செய்யும் ஒருவர் அதற்காக முதலீடு செய்த தொகையைக் காண்க.

2. வங்கியொன்றின் பங்கொன்றின் விலை ரூ. $25$ ஆகும். ஒருவர்அவ் வங்கியின் $400$ பங்குகளை வாங்கினார் எனின் அவர் முதலீடு செய்த தொகையைக் காண்க.

3. ரூ. $30$ பெறுமதியான பங்குகளில் $600$ இனை கொள்வனவு செய்வதற்கு முதலீடு செய்ய வேண்டிய தொகையைக் காண்க

4. நிதி நிறுவனமொன்றின் $700$ பங்குகளை பங்கொன்றின் விலை ரூ. $15$ வீதம் கொள்வனவு செய்வதற்கு முதலீடு செய்ய வேண்டிய தொகையைக் காண்க.

**பங்கொன்றின் விலை காணல்**

1. தீபன் ரூ. $20\,000$ இனை முதலீடு செய்து கம்பனியொன்றின் $500$ பங்குகளை கொள்வனவு செய்கின்றார். அவர் கொள்வனவு செய்த பங்கொன்றின் விலையைக் காண்க.

2. பொதுக்கம்பனியொன்றின் $1\,200$ பங்குகளை கொள்வனவு செய்வதற்கு ஒருவர் ரூ. $96\,000$ இனை முதலீடு செய்தார் எனின் அவர் கொள்வனவு செய்த பங்கொன்றின் விலையைக் காண்க.

3. கண்ணன் கம்பனியொன்றின் $300$ பங்குகளை கொள்வனவு செய்வதற்கு ரூ. $12\,000$ இனை முதலீடு செய்தார் எனின் அவர் கொள்வனவு செய்த பங்கொன்றின் விலையைக் காண்க.

4. மோனா ரூ. $20\,000$ இனை முதலீடு செய்து கம்பனியொன்றின் $800$ பங்குகளை கொள்வனவு செய்தார். அவர் கொள்வனவு செய்த பங்கொன்றின் விலையைக் காண்க.

**பங்குகளுக்கான பங்கிலாபம்**

- கம்பனியின் இலாபத்தில் பங்கொன்றுக்கு வழங்கவேண்டிய தொகை பங்கிலாபம் எனப்படும்.
- இதை பயன்படுத்தி பங்குகளைக் கொள்வனவு செய்யும் ஒருவரின் ஆண்டு வருமானம் கணிக்கப்படும்

ஆண்டு வருமானம் $=$ பங்குகளின் எண்ணிக்கை $\times$ ஒரு பங்கிற்கான ஆண்டு பங்கிலாபம்

## ஆண்டு பங்கிலாப வருமானம் காணல்

**உதாரணம்**

- ஒரு கம்பனி ஒரு பங்கிற்கான ஆண்டு பங்கிலாபமாக ரூ. $3$ ஐ பிரகடணம் செய்கின்றது. அக்கம்பனியில் $5\,000$ பங்குகளைக் கொள்வனவு செய்யும் பங்குதாரருக்கு கிடைக்கும் ஆண்டுக்குரிய பங்கிலாப வருமானத்தைக் காண்க.

  பங்கிலாப வருமானம் $= 5\,000 \times 3$

  $=$ ரூ. $15\,000$

**உங்களின் முயற்சிக்கு…**

1. ஒரு பங்கிற்கு ஆண்டு பங்கிலாபம் ரூ. $5$ இனை வழங்கும் கம்பனியொன்றின் $2\,500$ பங்குகளை வைத்திருக்கும் ஒருவருக்கு பங்குகளால் கிடைக்கும் ஆண்டு வருமானத்தைக் காண்க.

2. குமரன் நிறுவனமொன்றின் $1\,200$ பங்குகளை கொள்வனவு செய்தார். நிறுவனம் ஒரு பங்கிற்கு ஆண்டு பங்கிலாபம் ரூ. $4$ வீதம் வழங்கியது எனின் குமரனுக்கு கிடைக்கும் பங்கிலாப வருமானத்தைக் காண்க.

3. பங்கு ஒன்றிற்கு ஆண்டுப்பங்கிலாபம் ரூ. $8$ வழங்கும் கம்பனியொன்றின் $2\,400$ பங்குகளை வைத்திருக்கும் ஒருவருக்கு வருட நிறைவில் கிடைக்கும் பங்கிலாப வருமானத்தைக் காண்க.

4. ரூ. $30$ பெறுமதியான பங்குகளை கொள்வனவு செய்வதற்கு கண்ணா என்பவர் ரூபா $18\,000$ இனை முதலீடு செய்கின்றார். பங்கு ஒன்றிற்கான ஆண்டு பங்கிலாபம் ரூ. $7$ எனின் வருட நிறைவில் கிடைக்கும் பங்கிலாப வருமானத்தைக் காண்க.

**மூலதன இலாபம்**

- கொள்வனவு செய்த பங்குகளை விற்பதனால் கிடைக்கின்ற இலாபம் மூலதனலாபம் எனப்படும்.

மூலதனலாபம் = பங்குகளின் விற்பனை விலை − பங்குகளின் கொள்விலை (முதலீடு)

**அல்லது**

மூலதனலாபம் = பங்குகளின் எண்ணிக்கை × ஒரு பங்கிற்கான மூலதனலாபம்

**மூலதனலாபம் காணல்**

**உதாரணம்**

- குறித்த கம்பனியொன்றின் ரூ. 20 பெறுமதியான பங்குகளில் 500 கொள்வனவு செய்த சோழன் வருட நிறைவில் அப்பங்குகளை பங்கொன்றை ரூ. 28 வீதம் விற்பனை செய்கின்றார். விற்பனை செய்வதனூடாக சோழன் பெற்றுக்கொண்ட மூலதனலாபத்தைக் காண்க.

**முறை 1**

பங்குகளின் கொள்விலை $= 20 \times 500$

$= \text{ரூ.}\ 10\,000$

பங்குகளின் விற்பனை விலை $= 28 \times 500$

$= \text{ரூ.}\ 14\,000$

மூலதனலாபம் $= \text{ரூ.}\ 14\,000 - \text{ரூ.}\ 10\,000$

$= \text{ரூ.}\ 4\,000$

**முறை 2**

ஒரு பங்கிற்கான மூலதனலாபம் $= \text{ரூ.}\ 28 - \text{ரூ.}\ 20$

$= \text{ரூ.}\ 8$

மூலதனலாபம் $= 500 \times \text{ரூ.}\ 8$

$= \text{ரூ.}\ 4\,000$

**உங்களின் முயற்சிக்கு…**

1. பங்கொன்றை ரூ. 30 இற்கு கொள்வனவு செய்து ரூ. 45 இற்கு விற்பனை செய்வதனால் பங்கு ஒன்றிற்கு கிடைக்கும் மூலதன இலாபத்தைக் காண்க.

2. ரூ. 40 வீதம் 500 பங்குகளை கொள்வனவு செய்யும் தினேஷ் அவற்றை ரூ. 50 வீதம் விற்பனை செய்கின்றார். இதனால் அவருக்கு கிடைத்த மொத்த மூலதன இலாபத்தைக் காண்க.

3. ரூ. 120 000 இனை முதலீடு செய்து கம்பனியொன்றின் ரூ. 25 பங்குகளை கொள்வனவு செய்யும் ஒருவர் வருட நிறைவில் அவற்றை ரூ. 30 வீதம் விற்பனை செய்தார் எனின் அவருக்கு கிடைக்கும் மொத்த மூலதன இலாபத்தைக் காண்க.

4. ரூ. 40 000 இனை முதலீடு செய்து ரூ. 80 பெறுமதியான பங்குகளை கொள்வனவு செய்யும் ஒருவர் வருட நிறைவில் அவற்றை ரூ. 100 வீதம் விற்பனை செயகின்றார். அவருக்கு கிடைத்த மூலதன இலாபத்தைக் காண்க.

5. கம்பனியொன்றின் பங்குகளின் சந்தைவிலை ரூ. 25 ஆகும். அக்கம்பனியில் ரூ. 80 000 இனை முதலீடு செய்கின்றார். கம்பனியானது ஒரு பங்கிற்கு ஆண்டுபங்கிலாபம் ரூ. 4 இனை வழங்குகின்றது. வருட நிறைவில் பங்கிலாபத்தை பெற்ற பின்னர் அப்பங்குகளை பங்கொன்று ரூ. 33 வீதம் விற்பனை செய்கின்றார்
   i. கொள்வனவு செய்த பங்குகளின் எண்ணிக்கையைக் காண்க.
   ii. வருட நிறைவில் கிடைத்த பங்கிலாப வருமானத்தைக் காண்க.
   iii. பங்குகளை விற்பனை செய்வதனால் கிடைத்த மூலதன வருமானத்தைக் காண்க.
   iv. ஆண்டு நிறைவில் கிடைத்த மொத்த வருமானத்தைக் காண்க.